மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரியில் நேற்று (30.08.2024) நடைபெற்ற 29வது இளங்கலை மருத்துவப் பட்டமளிப்பு விழாவில் மாணவ, மாணவிகளுக்கு மருத்துவர் பட்டங்களை வழங்கினார்கள். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.மணிகாந்தன் ஆகியோர் உள்ளனர்.

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, திண்டுக்கல் மாவட்டம், கரியாம்பட்டி ஊராட்சியில், கரியாம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு நேற்று (30.08.2024) அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு டிராக்டர் வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திருமதி சத்தியபுவனா ராஜேந்திரன், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் கா.பொன்ராஜ், பழனி வருவாய் கோட்டாட்சியர் சௌ.சரவணன், கூட்டுறவு சங்கங்கள் இணைப்பதிவாளர் கோ.காந்திநாதன், மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் திருமதி சுபாஷினி உட்பட பலர் உள்ளனர்.

இளைய சமுதாயத்தினர் ஏற்றம் பெற – சமூகநலனுக்காக

தொலைநோக்குத் திட்டங்களை முதல்வர் நிறைவேற்றி வருகிறார்!

கோவை பேரூரில் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியில் தமிழ் கல்லூரியில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேச்சு!

கோவை, ஆக.31-

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூரில் உள்ள தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க் கல்லூரியில் நடைபெற்ற, குமாரதேவர் மாணாக்கர் அருள் நெறி மன்றம் 36ஆம் ஆண்டு தொடக்க விழா, தமிழ் மன்ற தொடக்க விழா, நொய்யல் தமிழ் மன்ற தொடக்க விழா இந்த 3 பெரும் விழாக்களை ஒருங்கிணைத்து நடைபெற்ற முப்பெரும் விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு ஆற்றிய உரை வருமாறு :-

இந்த சிறப்பான நிகழ்வில் பங்கேற்பதற்கு, கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னால் பேரூரில் இந்த கலைக் கல்லூரியில் தமிழ் மன்றங்கள் தொடங்கி வைக்கும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டும் என்று பெருமதிப்பிற்குரிய அடிகளார் அவர்கள் சொன்னார்கள்.

உடனே இன்றைக்கு காலையில் இருந்து பல்வேறு பணிகளில் ஈடுபட்டு, இந்த நிகழ்ச்சிக்கு வருவதற்கு கொஞ்சம் காலதாமதமும் ஆகியிருக்கிறது. இன்று காலை சென்னையில் இருந்து வந்து கோவை பன்னாட்டு விமான நிலையத்தில் தற்போது உலகை அச்சுறுத்தி கொண்டிருக்கும் குரங்கம்மை, வெளிநாடுகளில் இருந்து வரும் பயணிகளிடம் வெப்ப அளவு கருவிகளின் மூலம் குரங்கம்மை நோய் பாதிப்பு இருக்கிறதா என்று கண்டறிவதற்கு அந்த கருவியை வைத்து ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம்.

வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் கண்காணிப்பு!

தமிழகத்தைப் பொருத்தவரை சென்னை, கோவை, மதுரை, திருச்சி ஆகிய பன்னாட்டு விமான நிலையங்களில் அந்த கருவிகள் பொருத்தப்பட்டு, வெளிநாடுகளிலிருந்து வருபவர்களை கண்காணிக்கும் பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அந்த வகையில் கோவையில் பன்னாட்டு விமான நிலையத்தில் அந்த பணியின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுகள் மேற்கொண்டு, பிறகு பத்திரியாளர்களை சந்தித்து அந்த செய்திகளை எடுத்துக் கூறிவிட்டு, தொண்டாமுத்தூரில் 100 படுக்கைகளுடன் கூடிய ஒரு தனியார் மருத்துவமனையை திறந்து வைத்து, அதற்குப் பிறகு தொண்டாமுத்தூரில் இருக்கும் ஒரு அரசு மருத்துவமனையில் ஆய்வு செய்து, அதைத் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிர்வாகிகளால் அரசு மருத்துவ நிர்வாகத்திற்கு அளிக்கப்பட்டிருக்கும் ஆம்புலன்ஸ் ஒன்றையும் தொடங்கி வைத்துவிட்டு இந்த நிகழ்ச்சிக்கு வருவதற்கு காலதாமதம் ஆகியிருக்கிறது.

இது முடித்து, நான் விரைந்து சேலத்திற்கு சென்று சேலம் அரசு மருத்துவக் கல்லூரியில் நடைபெறவிருக்கும் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு, ஐந்து மணிக்கு சேலத்தில் இருந்து விமானம் பிடித்து சென்னைக்கு செல்ல வேண்டும் என்ற வகையில் இன்றைக்கான என்னுடைய பயணத் திட்டத்தை வகுத்து வந்து கொண்டிருந்தேன்.

நம்முடைய அடிகளார் அவர்கள் இந்த கல்லூரிக்கு வர வேண்டும் என்று சொன்னார்கள். உண்மையில் நம்முடைய அடிகளாருக்கு ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் நன்றி சொல்ல வேண்டும் என்று காத்திருந்தேன். அவரே இங்கு குறிப்பிட்டதைப்போல, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா சென்னையில் 100 நிகழ்ச்சிகளை ஓராண்டும் முழுவதும் நடத்தினோம். அந்த ஓராண்டு முழுவதும் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள் வாழ்த்தரங்கங்களாகவும், பொதுக்கூட்டங்களாகவும், ஏழைஎளியவர்கள் பயன்படத்தக்க வகையில் நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழாக்களாகவும், உதவித் தொகை வழங்கும் முகாம்களாகவும், விளையாட்டு போட்டிகளாகவும் 100 நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டு, அந்த 100 நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது.

அதில் மிக முக்கியமான நிகழ்ச்சியாக நம்முடைய சன்னிதானங்களை எல்லாம் அழைத்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழுக்கு பெருமை சேர்க்கும் வகையில் ஒரு நிகழ்ச்சி நடத்திட வேண்டும் என்று முடிவெடுத்தபோது, பெருமதிப்பிற்குரிய பேரூர் அடிகளார் அவர்களையும், அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள செய்ய வேண்டும் என்று விருப்பம் தெரிவித்து, அவரும் அங்கே கலந்து கொண்டு, மிகச் சிறப்பாக வாழ்த்துரையை அங்கே வழங்கினார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெருமைகள் குறித்து நம்முடைய அடிகளார் அவர்கள் சென்னையில் ஆற்றிய உரை என்பது, சென்னையின் தி.மு.கழக தோழர்களுக்கு மிகப்பெரிய அளவில் ஒரு மகிழ்ச்சியை தந்தது. அடிகளார் அவர்களுக்கும் - தி.மு.க. கழகத்திற்கும் ... தொடர்பைப் போல, நான்கு தலைமுறைகளாக தி.மு.கழகத்தோடு தொடர்ந்து கொண்டிருக்கிறோம் என்ற மகிழ்ச்சியான செய்தியினை பதிவு செய்தார்கள். அந்த வகையில், அவர் அங்கு ஆற்றிய உரை என்பது எல்லோரையும் மகிழ்வித்தது. அந்த வகையில் அவருக்கு எப்போதாவது, ஏதாவது ஒரு சமயத்தில் நாங்கள் அழைத்ததற்காக நன்றியை தெரிவித்து, அழைத்த உடன் வந்து பெருமைச் சேர்த்ததற்காக நன்றி தெரிவிக்க வேண்டும் என்கிற வகையில் காத்திருந்தோம். இந்த வாய்ப்பு அதற்காக பயன்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

பெருமதிப்பிற்குரிய அடிகளார் அவர்களுக்கு சென்னை தெற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், அங்கே இருக்கும் லட்சோப லட்ச தி.மு.கழகத்தின் தொண்டர்கள் சார்பிலும் அவர் அந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்து பெருமைச் சேர்த்ததற்காகவும், சிறப்பான உரையை தந்ததற்காகவும் என்னுடைய நன்றியை நான் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக் கொள்வதில் பெருமை அடைகிறேன்.

இங்கே 3 மன்றங்கள் குமாரதேவர் மாணாக்கர் அருள்நெறி மன்றம், ... தமிழ் மன்றம், நொய்யல் தமிழ் மன்றம் ஆகிய 3 மன்றங்களின் 36ஆம் ஆண்டு விழா இங்கே இப்போது தொடங்கியிருக்கிறது. இந்த மன்றங்கள் 1988ஆம் ஆண்டில் தொடங்கி இன்று வரைக்கும் 35 ஆண்டுகள் நிறைவு செய்து, 36ஆம் ஆண்டில் அடி எடுத்து வைக்கும் ஒரு நல்ல நிகழ்ச்சியில் நானும், நம்முடைய தமிழ் வளர்ச்சித் துறையின் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்களும் கலந்து கொள்ளும் இந்த நல்ல வாய்ப்பு என்பது எங்களுக்கு உண்மையில் மகிழ்ச்சி அளிக்கக் கூடிய ஒன்று.

அடிகளார் அவர்கள் எடுத்துச் சொன்னதுபோல, முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு பள்ளிக்கல்வித் துறைக்காக இருந்தாலும் சரி; உயர்கல்வித்துறைக்காக இருந்தாலும் சரி; அவர் ஆற்றிக் கொண்டிருக்கும் பணிகள் எல்லாம் நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

அரசு பள்ளியில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை படித்த மாணவிகளுக்கு 'மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் புதுமைப்பெண் திட்டம்' என்கின்ற ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தி, அந்தத் திட்டத்தின் வாயிலாக கலைக் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவிகளுக்கு 3 ஆண்டுகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் என்கின்ற வகையில் 36 ஆயிரம் ரூபாயும், பொறியியல் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவிகளுக்கு 4 ஆண்டுகளுக்கு 48 ஆயிரம் ரூபாயும், மருத்துவம் போன்ற கல்விகளில் படிக்கின்ற மாணவிகளுக்கு 5 ஆண்டுகளுக்கு 60 ஆயிரம்ரூபாயும், டிப்ளமோ போன்ற கல்வியை படிக்கின்ற மாணவிகளுக்கு 2 ஆண்டுகளுக்கு 24 ஆயிரம் ரூபாயும், மாதத்திற்கு ஆயிரம் ரூபாய் தரும் அந்தத் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். அந்த திட்டம் தொடங்கப்பட்டு கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் 4 லட்சத்து 81 ஆயிரத்து 75 மாணவிகள் அதன் மூலம் பயன்பட்டிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தி தமிழ்நாடு முழுவதும் இருக்கும் பொதுமக்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தி இருக்கிற காரணத்தினால், மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு கோரிக்கை ஒன்று விடுக்கப்பட்டது.

மாணவிகளுக்கு தரப்பட்டுக் கொண்டிருக்கும் அந்த உதவித் தொகை மாணவர்களுக்கும் தரப்பட வேண்டும் என்கின்ற வகையில் அந்த கோரிக்கை விடுக்கப்பட்டது. உடனடியாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஒரு மாதத்திற்கு முன்புதான் இதே கோவையில் ஒரு மிகப்பெரிய நிகழ்ச்சியை நடத்தி அந்த நிகழ்ச்சியின் வாயிலாக இனிமேல் மாணவர்களும் இந்தத் திட்டத்தின் மூலம் பயன்பெறுவார்கள் என்று அறிவித்து, 380 கோடி ரூபாயை நடப்பாண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்து, இதன் மூலம் 3 லட்சத்து 78 ஆயிரம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் அந்தத் திட்டத்தை கடந்த மாதம் தமிழ்நாட்டில் தொடங்கி வைத்திருக்கிறார்கள். அந்த திட்டத்திற்குக்கூட மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் வைத்திருக்கும் பெயர், 'தமிழ்ப் புதல்வன் திட்டம்', மாணவிகளுக்கு உதவித் தொகை வழங்கும் அந்த திட்டத்திற்கு பெயர், 'புதுமைப் பெண் திட்டம்' என்ற வகையில் இன்றைக்கு அந்த திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு கொண்டிருக்கிறது.

இந்த 2 திட்டங்கள் தமிழ்நாட்டில் உயர்கல்வி வளர்ச்சிக்கு எந்த அளவிற்கு உறுதியாக இருக்கிறது என்பதை நம்முடைய அடிகளார் போன்றவர்கள் நன்கு அறிவார்கள். இன்றைக்கு உயர் கல்வியில் சேர்பவர்களின் எண்ணிக்கை இந்த திட்டங்களின் மூலம் 34 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியும் தமிழ்நாட்டு மக்களுக்கு பெருமை சேர்க்கிற விஷயம்.

அதேபோல், இன்னும் ஒரு திட்டம். உயர்க் கல்வியை படித்தவர்கள், மேல் நிலைக் கல்வியை முடித்தவர்களுக்கு அவர்கள் அடுத்த என்ன படிக்கலாம்? என்ன பணிக்கு செல்லலாம்? எப்படிப்பட்ட திறன் மேம்பாட்டு பயிற்சிகளை மேற்கொள்ளலாம்? என்பதற்கு ஒரு திட்டத்தை தொடங்கி, அதற்கு 'நான் முதல்வன்' என்கிற பெயர் சூட்டினார் முதலமைச்சர் அவர்கள். அந்த நான் முதல்வன் என்கிற மகத்தான திட்டம் இன்றைக்கு தமிழ்நாட்டில் மிகப்பெரிய அளவில் பயன்பட்டுக் கொண்டிருக்கிறது.

மாணவ மாணவியர்கள் பயன்படுத்தும் அந்த திட்டத்திற்கு ஒரு தனித்துறையை ஏற்படுத்தி, அந்த நான் முதல்வன் என்கிற திட்டத்தின்மூலம் இன்றைக்கு 28 லட்சம் இளைஞர்கள் தமிழ்நாட்டில் பயன்பட்டிருக்கிறார்கள்.

நான் ஏற்கனவே சொன்னதைப்போல, புதுமைப் பெண் திட்டத்தில் 4 லட்சத்து 81 ஆயிரத்து 75 பேர், தமிழ்ப் புதல்வன் திட்டத்தில் 3 லட்சத்து 78 ஆயிரம் பேர், 28 லட்சம் இளைஞர்கள் பயன்பெறும் வகையிலான திட்டம், நான் முதல்வன் என்ற திட்டம். இவ்வாறு பல லட்சம் இளைஞர்கள் இன்றைக்கு பயன்பட்டுக் கொண்டிருக்கிற அந்த மகத்தான திட்டங்கள் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு கொண்டிருக்கிறது.

அண்மையில் முதலமைச்சர் அவர்களோடு ஒரு விழாவில் நான் கலந்து கொண்டேன். பள்ளிக் கல்வித் துறையும், உயர் கல்வித் துறையும் நடத்திய அந்த நிகழ்ச்சியில் ஏறத்தாழ 460 க்கும் மேற்பட்ட அரசு பள்ளிகளில் படித்த மாணவர்கள் வெளிநாடுகளில் படிப்பதற்கும், வெளி மாநிலங்களில் ஐ.ஐ.டி., என்.ஐ.டி. போன்ற உயர்கல்வி நிறுவனங்களில் படிப்பதற்கும் முதலமைச்சர் அவர்கள் அதற்கான ஆணைகளை தந்தார்கள்.

ஆணைகளை தந்ததோடு மட்டுமல்லாமல் அந்த விழாவில் பேசினார்கள். "இனிமேல் இதுபோல் அரசு பள்ளிகளில் படித்து வெளிநாடுகளில் படிப்பதற்கு வாய்ப்பு கிடைத்தவர்களுக்குரிய அந்த முதல் பயணச் செலவை அரசே இலவசமாக எடுத்துக் கொள்ளும்" என்கின்ற ஒரு மகத்தான திட்டத்தையும் அறிவித்திருக்கிறார்கள்.

எனவே கிராமப்புறங்களில் இருக்கும், குக்கிரமங்களில் இருக்கும், மலைக்கிராமங்களில் இருக்கும் ஏழைஎளிய மாணவமாணவிகளின் உயர்கல்வி கனவு இன்றைக்கு தமிழ்நாடு குறிப்பாக தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் எந்த அளவிற்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

இளைஞர்களை ஊக்கப்படுத்தும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்!

அந்த அளவிற்கு இன்றைக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் அவர்களும் இளைஞர் சமுதாயத்தின் சக்தியை வீணடிக்காமல் அவர்களுள் விளையாட்டு ஆர்வத்தில் யாரெல்லாம் பெரிய அளவில் பங்கு கொண்டிருக்கிறார்களோ அவர்களை ஒருங்கிணைத்து ஒலிம்பிக் அளவில் செல்பவர்களுக்கும், தேசிய அளவில், மாநில அளவில், உலக அளவில் பல்வேறு போட்டிகளில் பங்கு கொள்வதற்கான உதவித் தொகைகளை வழங்கி அவர்களை உற்சாகப்படுத்தி விளையாட்டுத் துறையில் தமிழ்நாடு இன்றைக்கு ஒரு முன்னணி மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக, முதலமைச்சர் அவர்கள், இன்றைக்கு குழந்தைகள் முதல் குடு குடு கிழவன் வரை அனைத்து தரப்பினரும் பயன்படுகிற திட்டங்களை தமிழ்நாட்டில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்றாலும், தொடக்கப் பள்ளிகளில் குழந்தைகளின் சேர்க்கை கூடுதலாக வர வேண்டும், அரசு பள்ளிகளில் சேர்க்கின்ற எண்ணம் பெற்றோருக்கு வர வேண்டும் என்று 21 லட்சம் குழந்தைகளுக்கு 'காலை உணவுத் திட்டம்' என்ற ஒரு மகத்தான திட்டத்தை தமிழ்நாட்டில் செயல்படுத்தி நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு காலை உணவுத் திட்டமாக இருந்தாலும், புதுமைப் பெண் திட்டமாக இருந்தாலும், தமிழ்ப் புதல்வன் திட்டமாக இருந்தாலும், நான் முதல்வன் திட்டமாக இருந்தாலும் மாணவர்கள் பயன்பெறும் திட்டங்களாக இன்றைக்கு தமிழ்நாட்டில் மிகப்பெரிய அளவில் பயன்பாட்டில் இருந்து கொண்டிருக்கிறது.

தமிழ் சார்ந்து நடத்தப்படும் மூன்று மன்றங்கள்!

அதைத்தான் நம்முடைய அடிகளார் அவர்களும் இங்கே மிகச் சிறப்பாக எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், இன்றைக்கு இளைய சமுதாயத்தின் எழுச்சியை, இளைய சமுதாயத்தின் ஏற்றத்தை, இளைய சமுதாயத்தின் கல்வி மேம்பாட்டை, இளைய சமுதாயத்தின் எதிர்கால வாழ்வை சிறப்பிப்பதற்கு எந்த அளவிற்கு சிறப்பான திட்டங்களை செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இங்கே மிகச் சிறப்பான எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

அந்த வகையில், இந்தக் கல்லூரியில் தமிழ் மீது ஆர்வம் கொண்டவர்களாக உருவாக்குவதற்கும், தமிழ்ப்பற்றை கூடுதலாக உருவாக்குவதற்கும், தமிழ் மீதான அக்கறையை அதிகப்படுத்துவதற்கும், தமிழ் மீதான காதலை உருவாக்குவதற்குமான 3 அற்புதமான மன்றங்களை உருவாக்கி, 35 ஆண்டுகளாக மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பது எனக்குத் தெரிந்து தமிழ்நாட்டில் இருக்கும் கலைக் கல்லூரிகளில் அநேகமாக பேரூரில் இயங்கிக் கொண்டிருக்கும் இந்த ஒரு கலைக் கல்லூரியாகத்தான் இருக்கும் என்பது என்னுடைய பணிவான கருத்து.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசினார்.

நேற்றைக்குக்கூட நான் சென்னை மருத்துவக் கல்லூரியில் மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கிடையே 'அறம்' என்கிற ஒரு மன்றத்தை தொடங்கி வைத்தேன். மாணவர்களிடையே மன்றங்கள் தொடங்கப்படும், நடத்தப்படும். ஆனாலும் 3 மன்றங்கள், அதுவும் தமிழ் சார்ந்து நடத்தப்படும் இந்த 3 மன்றங்கள் 35 ஆண்டுகளாக செயல்படுவதும், அதற்கு 36வது ஆண்டு தொடக்க விழா நடந்திருப்பதும் பேரூரில் மட்டும் தான் என்ற ஒரு மகிழ்ச்சி கலந்த பாராட்டுகளை தெரிவித்து, இந்த கல்லூரி நிர்வாகத்திற்கும், மாணவமாணவிகளுக்கும், இதை மிகச் சிறப்பாக எடுத்துச் சென்று கொண்டிருக்கும் அடிகளார் அவர்களுக்கும், என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

மயிலை தா.வேலு எம்.எல்.ஏ. - தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. - ஈரோடு இறைவன் சிறப்புரை!

தியாகராயர் நகர் 132வது வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்!

ந.மோ.முரளி முன்னிலை ! மு. சத்யா - கார்த்திகா பாஸ்கர் தலைமை!

சென்னை, ஆக.31-

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராய நகர் மேற்கு பகுதி, 132 வது வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம், 2.9.2024 - திங்கட்கிழமை, மாலை 6 மணி, அன்னை அஞ்சுகம் திருமண மண்டபம் கோடம்பாக்கம் அம்பேத்கர் சிலை அருகில் வட்டச் செயலாளர் ந.மோ.முரளி முன்னிலையில், கோடம்பாக்கம் மு சத்தியா, கார்த்திகா பாஸ்கர்mc ஆகியோர் தலைமையில் நடைபெறுகிறது.

மயிலை தா. வேலு எம்.எல்.ஏ., ஈரோடு இறைவன், முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், ஜெ. கருணாநிதி, கே.ஏழுமலை, எஸ். மோகன் ஆகியோர் இக்கூட்டத்தில் சிறப்புரை யாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் 132 வது வட்டக் கழகத்தை சார்ந்த அனைவரும் கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் நா. மோ.முரளி தெரிவித்துள்ளார்.

தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நேற்று (30.08.2024) வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, வி.க.நகர் மண்டலம், வார்டு 77க்குட்பட்ட டெமல்லஸ் சாலையில் ரூ.17,57 கோடி மதிப்பில் பக்கிங்ஹாம் கால்வாய்க்கு மழைநீர் வெளியேற்றும் வகையில் கட்டப்பட்டுள்ள நீரேற்று அறை மற்றும் இதர கட்டமைப்புகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன். பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ. குமரகுருபரன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி. மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

தமிழ்நாடு அரசின் கல்வித் துறைக்கு ஒதுக்க வேண்டிய

ரூ.2000 கோடியை விடுவிக்க ஒன்றிய அரசு மறுப்பதா?

அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் நலகூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் கண்டனம்!

திருவள்ளூர், ஆக.31-

அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் சார்பில் ஒதுக்கிய நிதி ரூ 2000 கோடி விடுவிக்க மறுக்கும் ஒன்றிய அரசை தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் நிறுவனத் தலைவர் சா.அருணன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவரது கண்டன அறிக்கை வருமாறு :

ஒன்றிய அரசு அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் சார்பில் ஒதுக்கீடு செய்த சுமார் 2000 கோடியை விடுவிக்காமல் தமிழகத்தை வஞ்சிக்கிறது அதாவது ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள மும்மொழி கொள்கையான புதிய கல்விக் கொள்கையை தமிழ்நாட்டிலும் கொண்டு வர வேண்டும் அப்படிக் கொண்டு வந்தால் மட்டுமே நிதியை விடுவிக்க இயலும் என்று தெரிவித்திருக்கிறது.

அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் மூலமாக தான் 12 ஆயிரம் பகுதிநேர சிறப்பாசிரியர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பராமரிப்பு ஆசிரியர்கள் என 15 ஆயிரம் ஆசிரியர்களின் ஊதியம் வகுப்பறை கட்டடங்கள் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், ஆசிரியர்களுக்கான அனைத்து வகை பயிற்சிகள் மேற்கொள்ள இந்த நிதியை தான் பயன்படுத்துகின்றனர் ஆனால் ஒன்றிய அரசு மும்மொழிக் கொள்கையான புதிய கல்விக் கொள்கையை தமிழ் நாட்டில் அமல்படுத்தினால் மட்டுமே விடுவிக்க இயலும் என தெரிவித்து உள்ளது இது எதனால் என்றால் இந்தியையும் சமஸ்கிருத மொழியையும் தமிழ்நாட்டில் கொண்டுவந்து மாணவர்களின் கல்வித் தரத்தை சீரழிக்கவே.

மேலும் இதே நிலையை தொடர்ந்து ஒன்றிய அரசு மேற்கொண்டுவருவதை தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு வன்மையாக கண்டிக்கிறது மும்மொழிக் கொள்கையை தமிழ்நாட்டில் கொண்டுவருவதை கைவிட்டு அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் சார்பில் ஒதுக்கிய நிதியை உடனடியாக வழங்கவேண்டும் என தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் கேட்டுக் கொள்கிறேன் அப்படி வழங்கவில்லை என்றால் தமிழ்நாட்டில் மக்களை திரட்டி மிக பெரிய போட்டத்தை மேற்கொள்ள தயங்கமாட்டோம் என தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு நிறுவனத் தலைவர் சா.அருணன் தெரிவித்துக் கொண்டார்.